1969 மார்ச் 10]

திரு. கே. விநாயகம் : குறிப்பு என்னிடத்தில் இல்லையென்று சொன்னால், வேறு எந்த விளக்கத்தை எதிர்பார்க்க முடியும் என்ற சந்தேகம் வருகிறது. இது ஒன் வே டிராபிக்காக இருக்கிறது. போக்கு வாத்தை ஒரு பகுதி நிறுத்திவிட்டு ஒரு பகுதியைப் போகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதனால் அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. இந்த அனுபவம் அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கிறதா ? அதன் மீது நடவடிக்கை எடுத்து அதற்காக ஒரு எஸ்டிமேட் தயார் செய்வதற்கு ஏன் முன்வரவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னைவிட கனம் உறுப்பினர் அவர்களுக்கு எக்ஸ்பீரியன்ஸ் அதிகம் ஏற்பட்டிருக்கும். இது பற்றி மறு பரிசீலனை செய்து நிதி நிலைமை இடம் தருமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

அந்தியூர்—கொள்ளேகால் சாலை.

* 262—வினா : திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர், தட்டகாவி ஆகியவற்றின் வழியாக அந்தியூரிலிருந்து கொள்ளேகால் செல்லும் சாலையை மேம்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பவானி-செல்லம்பாளையம் சாலையின் 12/0 மைல் முதல் 19/2 மைல் வரை அமைந்துள்ள அந்தியூர் செல்லம்பாளையம் சாலைப் பகுதி தார் போடப்பட்டு ஏற்கனவே மேம்படுத்தப் பட்டுள்ளது. செல்லம்பாளையத்திலிருந்து கொள்ளேகாலம் வரையுள்ள சாலையின் எஞ்சிய பகுதியை அதே போன்று மேம்படுத்தும் பணியை நிறைவேற்றுவதற்கான செயற் குறிப்புகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

வேலூர் மத்திய சிறை முன்னாள் கண்காணிப்பாளர்.

*263 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மத்திய சிறை சூப்பிரெண்டெண்டாக இருந்த ஒருவர் பல பொருள்களைத் தவறான முறையில் விற்பனை செய்தார் என்பதற்காக 1966-வது ஆண்டில் மாநில சிறை அதிகாரியின் மூலமாகவும், 1967-வது ஆண்டில் விஜிலென்ஸ் பார்ட்டியார் மூலமாகவும் விசாரணை நடைபெற்றது உண்மையா ?

(இ) அப்படியானால் அதன் விவரமென்ன ?

(உ) அதன்மீது நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்தி வருவதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்

(இ) இது நடுவர் மன்றத்தின் விசாரணையில் இருப்பதால் விவரங்களை வெளியிடுவதற்கில்லை.

(உ) கண்காணிப்பு—லஞ்ச ஒழிப்பு இயக்குனர் அலுவலகத்திலிருந்து லஞ்ச ஒழிப்பு ஆணையர் மூலம் வந்த விரிவான அறிக்கை மீது அரசாங்கம் உடனடியாக, தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது. இன்று இவ்வழக்கு விசாரணை செய்யப்படுவதற்காக, சென்னையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி மீது விசாரணை நடந்து வருகிறது.

திரு. வி கே. கோதண்டராமன் : சார், விவரம் சொல்வதற்கில்லை என்று சொன்னாலும்கூட இது சம்பந்தமாக பல பேர்கள் மாற்றப் பட்டிருக்கிறார்களா ? அப்படி மாற்றிவிட்டதற்குப் பிறகும் விசாரணை காலதாமதம் ஆகக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் மற்றவர்களை